## "உங்களுக்கு 'பயாலஜி' தெரியுமா?"



"துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அரசு நிகழ்ச்சியில், டி-ஷர்ட் போட்டு அதில் கட்சி சின்னத்தைப் பதிவு செய்து வருகிறார்" என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சொல்லியிருக்கிறார். அவருடைய காசில் டி-ஷர்ட் அணிகிறார். அரசின் பணத்தை எடுத்து, எம்.ஜி.ஆர் சமாதியில் இரட்டை இலை சின்னத்தை அமைத்த ஜெயக்குமார் பேசுவதற்குத் தகுதி இருக்கிறதா? எனப் பத்திரிகையாளர் பரகத் அலி முகநூல் பக்கத்தில் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

"ஜெயலலிதா ஆட்சியில் திரைகள் எல்லாம் போட்டு புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர் சமாதியை, திடீரென ஒரு நாள் தேதி குறிக்காமல், முதல்வர் ஜெயலலிதா திறந்தபோதுதான், முகப்பில் இரட்டை இலை சின்னம் பளிச்சிட்டது. 9 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணம் இரட்டை இலைக்கு விரயமானது. லாயிட்ஸ் ரோடு செய்ய வேண்டிய செலவை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை செய்தபோது இப்படித்தான் ஜெயக்குமார் குரல் கொடுத்தாரா?

அரசுப் பணத்தில் அ.தி.மு.க. தேர்தல் சின்னமா? என எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், "அது இரட்டை இலை அல்ல. பறக்கும் குதிரையின் இறகுகள்"" என்று நீதிமன்றத்தில் ஜெயலலிதா அரசு வியாக்கியானம் சொன்னபோது, "உங்களுக்கு 'பயாலஜி' தெரியுமா?" என அட்வகேட் ஜெனரல் நவநீத கிருஷ்ணனைப் பார்த்து, நீதிமன்றம் கொதித்தது" எனப் பதிவிட்டுள்ளார்.

## :.ப்ளாஷ்பேக்



தி.கூடலரசன்



### காலில் காயத்துடன் நடைப்பயணம்!

1982-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருச்செந்தூர் கோவில் அதிகாரி, கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை, 'நீதி கேட்டு நடைப்பயணம்' மேற்கொண்டார். அப்போது முரசொலி செய்தியாளராக இருந்த நான், தலைவருடன் நடைப்பயணத்தில் பங்கேற்று செய்தி சேகரித்தேன். காலில் கட்டுப்போட்டுக் கொண்டு அவர் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தார். இது, அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

**– தி.கூடலரசன், பத்திரிகையாளர், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இந்தி மொழி முடிவு!

1936-ஆம் ஆண்டு சைமன் கமிசன் வெளியிட்ட அறிக்கையின்படி, ஏற்பட்ட சீர்திருத்தத்துக்குப் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி தோல்வி அடைந்தது. அப்போதுதான் காங்கிரஸ் முதன்முதலாக சென்னை மாகாணத்தில் ஆட்சிக்கு வந்தது. 1937-ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சி ராஜாஜி அவர்களை முதல்வராகக் கொண்டு அமைக்கப்பட்டது. நீதிக்கட்சியின் முதலமைச்சராக இருந்த சுப்பராயன் 1938-இல் ராஜாஜி ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்தபோது, அவரது அறையில்தான் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** **32**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

# இந்திய ஆட்சிப் பணியும் இடஒதுக்கீடும்!



● சத்யேந்திரநாத் தாகூர்

நாட்டை ஆள்வது வாக்குச்சீட்டு மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களா அல்லது தேர்வுகள் மூலம் பணி நியமனம் பெறும் குடிமைப்பணி அதிகாரிகளா என்ற கேள்வி எப்போதும் மக்கள் மத்தியில் உண்டு.

அரசியலமைப்புச் சட்டவிதிகளின்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் குடிமைப்பணி அதிகாரிகளும் இணைந்து ஆட்சி நடத்தவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர், முதலமைச்சர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமல் நிர்வகிக்கப்பட்ட வரலாறு நம் நாட்டில் உண்டு. ஆனால், குடிமைப்பணி அதிகாரிகள் இல்லாமல் நிர்வகிக்கப்பட்ட வரலாறு இல்லை, என்பது நாட்டு நிர்வாகத்தில் குடிமைப்பணி அதிகாரிகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

நம் நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதிலும், கொள்கை முடிவுகளைச் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்துவரும் குடிமைப் பணித் துறையில் இடஒதுக்கீட்டுக் கொள்கை எவ்வாறு பரிணமித்தது?

1857-ஆம் ஆண்டு வரை, இந்தியாவின் நீதி, நிர்வாகப் பொறுப்பில் ஐரோப்பியர்கள் கிழக்கிந்திய நிறுவனத்தால் நேரடியாக நியமிக்கப்பட்டனர். 'சிப்பாய்' கலகத்திற்குப் பின்னர் இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக்கொண்ட பிறகு, இந்திய குடிமைப்பணி (Indian Civil Services) அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் போட்டித்தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டு, இந்தியர்களும் தேர்வில் பங்குபெற அனுமதிக்கப்பட்டனர். இத்தேர்வில் வெற்றிபெற்று 1863-இல் இந்திய சிவில் சர்வீஸ் அதிகாரியாகப் பொறுப்பேற்ற முதல் இந்தியர் சத்யேந்திரநாத் தாகூர். இவர் புகழ்பெற்ற நோபல் பரிசுபெற்ற வங்காள எழுத்தாளர் இரவீந்திரநாத் தாகூரின் மூத்த சகோதரர்.

### லண்டனில் தேர்வு

1921-ஆம் ஆண்டு வரை சிவில் சர்வீஸ் அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்வு லண்டனில் மட்டும் நடத்தப்பட்டது. இத்தேர்வுகளை இந்தியாவிலும் நடத்தவேண்டும் என்று, குறிப்பாக அக்காலத்தில் உயர்வகுப்பு இந்துக்களை உள்ளடக்கிய காங்கிரஸ் கட்சி கோரியது. இங்கிலாந்து செல்வதற்கான பயணச்செலவு, கடல் கடந்து பயணிப்பதைத் தடுக்கும் சாதிய, சாஸ்திர நம்பிக்கைகள் உள்ளிட்டவை அதற்கான காரணங்களாகச் சொல்லப்பட்டன. 1922-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தேர்வுகள் நடத்தப்படலாயின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஐ.சி.எஸ்ஸில் நுழைந்தவர்களில் 5% மட்டுமே இந்தியர்கள். இந்தியக் குடிமைப்பணிகளை இந்தியமயமாக்க வேண்டும் என்று எழும்பிய கோரிக்கைகளின் பின்னணியில் 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் 33% ஐ.சி.எஸ். பதவிகளை இந்தியர்களுக்குத் தர வேண்டும் என்று முன்மொழிந்தது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் இந்த எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. அதன்பின்னர், மெல்ல மெல்ல குடிமைப்பணித் துறைகளில் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. 1929-இல் I.C.S-இல் 29% இந்தியர்கள் இருந்தனர். 01.01.1940 அன்று நிலவரப்படி 50% குடிமைப்பணி அதிகாரிகள் இந்தியர்கள்.

எனினும் வளர்ந்து வந்த விகிதம் அனைத்து இந்தியர்களையும் உள்ளடக்கியதாக இல்லை. ஆகவே, இந்தியமயமாக்கல் என்பது உயர்வகுப்பு இந்துக்களுக்கு மட்டுமானதாக இருக்கிறது என்ற அடிப்படையில் மத, சாதி, பிராந்திய அடிப்படையிலான இடஒதுக்கீடுகள் வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. இந்திய ஆட்சிப் பொறுப்பில் தங்களுக்கும் பங்கு வேண்டும் என்ற அக்கோரிக்கைகள் இந்திய தேசியவாதத்திற்கு எதிரானவை என்று காங்கிரஸ் கட்சி கருதியது.

### மூன்றில் ஒரு பங்கு

அன்றைய தேசியவாதிகளின் எதிர்ப்பை மீறி, இந்தியாவில் உள்ள பலதரப்பட்ட வகுப்புகளுக்கு இந்தியக் குடிமைப்பணிகளில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற நோக்குடன், இந்தியக் குடிமைப்பணிகளில் மூன்றில் ஒரு பங்கு (33%) இடங்கள் மதச் சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்பட்டன. அவற்றில் 25% இடங்கள் முஸ்லிம்களுக்கும், மீதமுள்ள 8.33% இடங்கள் பிற மதச் சிறுபான்மையினருக்கும் ஒதுக்கப்பட்டன.

குடிமைப்பணித்துறைக்கு அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் பல்வேறு மாற்றங்கள் நடைபெற்றன. 1920-களில், சிவில் சர்வீஸில் நுழைவதற்கு ஐந்து விதமான முறைகள் இருந்தன. முதலாவதாக லண்டனில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகள், இரண்டாவதாக இந்தியாவில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகள், மூன்றாவதாக மாகாண அளவிலும் வகுப்பளவிலும் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த செய்யப்பட்ட நேரடிப்பணி நியமனம், நான்காவதாக மாகாண அரசின் கீழுள்ள குடிமைப்பணித் துறையில் பணியாற்றுபவர்களுக்கு பதவிஉயர்வு, ஐந்தாவது, வழக்கறிஞர்கள் சங்கத்தில் இருந்து நேரடிப் பணி நியமனம். அப்போது ஐ.சி.எஸ். அதிகாரிகளே நீதிபதிகளாகவும் பணியாற்றினர்.




**விடுதலை பெற்ற பின்னரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சிவில் சர்வீஸ் துறையில் இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை. 40 ஆண்டுகள் கழித்து, 1990-இல் பிரதமராக இருந்த வி.பி.சிங் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடங்களை ஒதுக்கினார்.**

பல்வகையான ஆட்சேர்ப்பு முறை இருந்தாலும், சிவில் சர்வீஸ் துறையில் உயர்சாதி, பணக்கார வர்க்கத்தினர் மட்டுமே இடம்பிடித்தனர். சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த, ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த, கிராமப்புறப் பின்னணிக் கொண்டவர்களால் சிவில் சர்வீஸ் துறையில் இடம்பிடிக்க இயலவில்லை. சாதி, கல்வி, ஆங்கிலப்புலமை, சமூகப் பின்னணி, பொருளாதார வசதியின்மை உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் சிவில் சர்வீஸ் துறை உயர்சாதித் துறையாகவே இருந்தது.

சிவில் சர்வீஸ் துறையில் மத அடிப்படையிலான இடஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டாலும், சாதி, பிராந்தியம் உள்ளிட்ட ஏனைய வகைகளிலும் ஏற்றத்தாழ்வுகள் மிகுதியாக இருந்தன. எடுத்துக்காட்டாக, 1931-இல் 22% இருந்த பஞ்சாப், ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்தோர் மூன்றில் சிவில் சர்வீஸ் துறையின் 75% இடங்களைப் பிடித்திருந்தனர்.

பம்பாய், ஒரிசா, சென்னை உள்ளிட்ட மற்ற மாகாணங்களைச் சேர்ந்தோர் மிகக் குறைந்த அளவிலேயே இருந்தனர். விடுதலைக்கு முந்தைய இடைக்கால அரசில் அமைச்சர்களாகப் பதவி வகித்த பீகாரின் இராஜேந்திர பிரசாத், தமிழ்நாட்டின் ஆர்.கே.சண்முகம் செட்டியார் உள்ளிட்டோர் இந்திய அரசின் ஆட்சிப்பணிகளில் மாகாண ரீதியிலான இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று கோரினர்.

மாகாண ரீதியில் இடஒதுக்கீடு வழங்கினால், அரசின் நிர்வாகத் திறன் பாதிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் வல்லபாய் படேல் கருதினார்.

### அளவுகோல் வேறுபாடு

விடுதலைக்கு முன்னரும் சிறுபான்மையினருக்கு சிவில் சர்வீஸ் துறையில் இடங்கள் ஒதுக்கப்பட்டாலும், யார் சிறுபான்மையினர் என்ற அளவு கோலில் மாறுபட்ட கருதுகோள்கள் இருந்தன. வடஇந்தியாவிலும் பஞ்சாபிலும் மத அடிப்படையில், இந்து அல்லாதவர்கள் சிறுபான்மையினராகக் கருதப்பட்டனர். சென்னை, பம்பாய் மாகாணங்களில் வகுப்பு அடிப்படையில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதவர் என்று பிரிக்கப்பட்டு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின்படி சிவில் சர்வீஸ் துறைக்கு அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் நேரடித் தேர்வுகளில் 12.5% இடங்கள் பட்டியல் சாதியினருக்கு ஒதுக்கப்பட்டன. அதன்பிறகு பழங்குடியினருக்கு 5% இடங்கள் ஒதுக்கப்பட்டன. நாட்டு விடுதலைக்குப் பின்னர் சிவில் சர்வீஸ் துறையில் மத அடிப்படையிலான இடஒதுக்கீடு கைவிடப்பட்டது.


1947-இல் மொத்தம் 980 ஐ.சி.எஸ். அதிகாரிகள் இருந்தனர். அவர்களில் 468 ஐரோப்பியர்கள், 352 இந்துக்கள், 101 முஸ்லிம்கள், 2 தாழ்த்தப்பட்ட வகுப்பினர், 5 ஆங்கிலோ-இந்தியர்கள், 25 இந்திய கிறிஸ்தவர்கள், 13 பார்சிகள், 10 சீக்கியர்கள், மீதமுள்ள நால்வர் மற்ற சமூகங்களைச் சேர்ந்தவர்கள். விடுதலை பெற்ற பின்னரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சிவில் சர்வீஸ் துறையில் இடஒதுக்கீடு வழங்கப்பட வில்லை. 40 ஆண்டுகள் கழித்து, 1990- இல் பிரதமராக இருந்த வி.பி.சிங் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடங்களை ஒதுக்கினார்.

**...குரல் ஒலிக்கும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**624**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131